**KPR IAS Academy**
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

### தமிழகத்தில் 2030-ம் ஆண்டுக்கான தொலைநோக்குத் திட்டங்கள்

# 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

## ‘கனவுகள் மெய்ப்படும்’ நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை

தமிழகத்தில் 2030-ம் ஆண்டை இலக்காக கொண்டு பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். தொழில் துறையில் ரூ.18 லட்சம் கோடி முதலீடு, 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ‘ஸ்மார்ட் வகுப்பறை’, விவசாய சாகுபடி பரப்பு 50 லட்சம் ஹெக்டேராக அதிகரிப்பு என்பது உட்பட பல்வேறு திட்டங்கள் ‘திராவிட மாடல் 2.0’ ஆட்சியில் செயல்படுத்தப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

தமிழக அரசின் ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டத்தின் நிறைவாக ‘தமிழ்நாடு 2030 - கனவுகள் மெய்ப்படும்’ எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

கடந்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களால் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அரசின் திட்டங்களால் பயனடையாத குடும்பங்களே தமிழகத்தில் இல்லை என்று கூறும் அளவுக்கு ஒவ்வொரு தரப்புக்கும் பார்த்துப் பார்த்து செய்துள்ளோம்.

அரசியல் ரீதியாக எழுந்த சில நெருக்கடிகளை சமாளித்துதான் பல திட்டங்களை செயல்படுத்தினோம். இந்த ஆட்சியின் சாதனைகளை நம்பி உறுதியாக கூறுகிறேன். அடுத்தும் திமுக ஆட்சிதான். நமது சாதனைகளின் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும்.

அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும் என ஒரு ‘ப்ளூ பிரின்ட்’ தயாரிக்க திட்டமிட்டோம். அதற்காக, தமிழகத்தின் 1.80 கோடி குடும்பங்களிடம் நேரடியாக சென்று, அவர்களது தேவைகளைக் கேட்டறிந்தோம். அதில் முன்னுரிமை அடிப்படையில் ‘தமிழ்நாடு 2030’ எனும் 14 முக்கிய அம்சங்களை அறிவிக்கிறேன்.



சென்னையில் நேற்று நடைபெற்ற ‘கனவுகள் மெய்ப்படும்’ நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் ஸ்டாலின்.

- 2030-ம் ஆண்டுக்குள் கிராமப்புறங்களில் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் 5 லட்சம் வீடுகள், நகர்ப்புறங்களில் 2 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.
- ‘நலமுடன் தமிழ்நாடு 2030’ திட்டத்தில் அனைவருக்கும் போதிய மருத்துவக் காப்பீடு கிடைக்க வழிசெய்யப்படும். நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோயைக் கண்டறிய சிறப்பு முகாம்கள், மாவட்டம்தோறும் மனநல ஆலோசனை மையம் அமைக்கப்படும்.
- விவசாய சாகுபடி பரப்பு 50 லட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும். 43 லட்சம் உழவர்களுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு, இயற்கை விவசாயம் 17 ஆயிரம் ஹெக்டேராகவும், உயிர் வேளாண்மை ஒரு லட்சம் ஹெக்டேராகவும் விரிவுபடுத்தப்படும். நுண்ணீர்ப் பாசனம் 21 லட்சம் ஹெக்டேராக விரிவுபடுத்தப்பட்டு, மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் 1,000 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் கட்டப்படும். உணவு உற்பத்தி 1.25 கோடி டன்னாக உயர்த்தப்படும். 1.25 லட்சம் உழவர்களுக்கு வேளாண் கருவிகள் வழங்கப்படும்.
- அனைத்து அரசு, அரசு உதவிப் பள்ளிகளிலும் ‘ஸ்மார்ட் வகுப்பறை’ அமைக்கப்படும். ‘வெற்றிப் பள்ளிகள் திட்டம்’ மூலம் 1,000 மாதிரிப் பள்ளிகள் விரிவுபடுத்தப்படும்.
- உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை 90 சதவீதத்தை எட்டும் வகையில் கட்டமைப்பு விரிவாக்கப்படும். ‘நான் முதல்வன் 2.0’ மூலம் கூடுதல் திறன் பயிற்சி வழங்கப்படும். ஆராய்ச்சியை அதிகரிக்க தொழிற்கல்வி சிறப்பு மையங்கள் நிறுவப்படும். அனைத்து கல்வி நிறுவனங்களிலும் ஏஐ ஆய்வகம் உருவாக்கப்படும்.
- ஜவுளி, தோல் ஆடை, கைவினை, கணினி தொழிற்பயிற்சி உள்ளிட்ட துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படும். சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களில் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.
- வீட்டு மனையற்ற ஆதிதிராவிட, பழங்குடியின குடும்பத்துக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை பெருக்குவதற்கான திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.
- கிராம சந்தைகள், விளையாட்டு, நல்வாழ்வு கட்டமைப்புகள் உள்ளிட்ட சிறப்பம்சங்கள் கொண்ட உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள் திட்டம் அமல்படுத்தப்படும். முதல்கட்டமாக 10 ஊராட்சிகளில் இப்போதே இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.
- தொழில் துறையில் ரூ.18 லட்சம் கோடி முதலீடு, 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, ஏற்றுமதி 120 பில்லியன் டாலராக உயர்வு ஆகியவை எங்கள் இலக்கு. இதற்காக மாவட்டம்தோறும் நவீன தொழிற்பூங்கா அமைக்கப்படும். ஐடி ஏற்றுமதி ரூ.6 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டு, அத்துறையில் 2 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். ஜவுளித் தொழில் நவீனமயமாக்கப்பட்டு, திருப்பூர், கரூரில் 35 ஆயிரம் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்படும்.
- உள்நாட்டு மீன் உற்பத்தி 4.50 லட்சம் டன், பால் உற்பத்தி 4.50 கோடி லிட்டர், கால்நடை எண்ணிக்கை 3 கோடியாக உயர்த்தப்படும். ஒரு லட்சம் ஏக்கரில் தீவனப் பயிர் சாகுபடி செய்யப்படும்.
- நகர்ப் பகுதிகளில் 20 சதவீத பசுமைப் பகுதிகள், பூங்காக்கள் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். கழிவுநீரை முழுமையாக சேகரித்து, சுத்திகரித்து 30 சதவீதம் மறுசுழற்சி செய்யப்படும்.
- வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளில், நமது சிறு, குறு தொழில் நிறுவனங்கள் பங்கேற்க வழிசெய்யப்படும்.
- நவீன தொழில்நுட்பங்களின் உதவியால் பாலங்கள், சாலைகளின் ஆயுள்காலம் நீட்டிக்கப்பட்டு, விபத்துகள் குறைக்கப்படும்.
- நெசவுத் தொழிலில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து, உற்பத்தியை அதிகரித்து, ஏற்றுமதிக்கு வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற வேண்டும். நாடே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்பதுதான் எனது மாபெரும் கனவு. நான் அறிவித்த திட்டங்கள் செயல்வடிவம் பெற மாவட்ட வாரியாக தனித்தனி செயல் திட்டங்கள் வகுக்கப்படும். இதையெல்லாம் நனவாக்கி, 2030-ல் தமிழகம் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்தப்படும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பழனிவேல் தியாகராஜன், தா.மோ.அன்பரசன், எம்ஆர்கே. பன்னீர்செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ‘திராவிட மாடல் 2.0’-க்கு அடிக்கல்

முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது:

மார்ச் 6- அண்ணா ஆட்சியில் அமர்ந்து தமிழினம் தலைநிமிர்ந்த நாள். 1967-ல் அண்ணா தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்று, தமிழகத்தின் எழுச்சிக்கும், தமிழினத்தின் மீட்சிக்கும் விதையூன்றிய நாள். அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்கான ‘ஸ்டாலின் ஸ்டேட்மென்ட்’- ஐ இந்த நாளில் அறிவிக்கிறேன். திராவிட ஆட்சி இந்த மண்ணில் மையம் கொண்ட நாளிலேயே ‘திராவிட மாடல் 2.0’-க்கு அடிக்கல் நாட்டுகிறேன்.. உங்கள் அனைவரின் ஆதரவோடும். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

---

**பொது அறிவு:** தொலைநோக்கியை முதன் முதலில் உருவாக்கியவர் டச்சு கண்ணாடி தயாரிப்பாளர் ஹான்ஸ் லிப்பர்ஷே (HANS LIPPERSHEY) ஆவார். அவர் 1608-ல் இதற்கு காப்புரிமை கோரினார். எனவே, தொலைநோக்கி கருவியைக் கண்டுபிடித்த பெருமை இவரையே சாரும்.

---

CHENNAI

15-ம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்களின் நிர்வாக மையமாக காஞ்சிபுரம் திகழ்ந்தது. மன்னர் மல்லிகார்ஜுன ராயர், விருபாக்ஷ ராயர் காலத்துக் கல்வெட்டுகள் காஞ்சி கோயில்களில் காணப்படுகின்றன. தங்கள் பிரதிநிதிகளாக நாயக்கர்களை நியமித்து அவர்கள் காஞ்சியை பராமரித்தனர்.

---

கிபி 949-ல் நடைபெற்ற தக்கோலம் போருக்குப் பிறகு, ராஷ்டிரகூட மன்னன் 3-ம் கிருஷ்ணன் வசம் காஞ்சிபுரம் சென்றது. இதை உறுதிப்படுத்தும் கல்வெட்டுகள் காஞ்சி பகுதிகளில் கிடைத்துள்ளன. சில ஆண்டுகளிலேயே சுந்தரச் சோழன் தலைமையிலான சோழர் வசம் காஞ்சி சென்றது.



**வெ.சாமிநாத சர்மாவின் 'எனது பர்மா வழிநடைப் பயணம்' நூல், நடைபயணமாகவே அவர் இந்தியா திரும்பியதைப் பற்றியது. இந்நூல் இரண்டாம் உலகப் போரில், பர்மாவின்மீது ஜப்பானியரின் தாக்குதலைப் பேசுகிறது.**

---

**ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி' நாவல், போர் நெருக்கடிகளுடன் கூடிய அயலகத் தமிழர் வாழ்வியல் பற்றியது. இந்நாவல் இரண்டாம் உலகப்போரில், சில தெற்காசிய நாடுகள் மீது ஜப்பானியரின் தாக்குதலைப் பேசுகிறது.**



---

**தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஆக.30 வரை**

# டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு

## 33 கேள்விகளுடன் வீடுவீடாக தரவுகள் சேகரிப்பில் 1.20 லட்சம் பணியாளர்கள்

**சென்னை**

தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஆக.30 வரை டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. இதில் 1.20 லட்சம் பணியாளர்கள் 33 கேள்விகளுடன் வீடுவீடாகச் சென்று தரவுகளை சேகரிக்க உள்ளனர்.

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வந்தது. கடைசியாக 2011-ம் ஆண்டு நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, 2021-ம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பரவல் காரணமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி தள்ளி வைக்கப்பட்டது. இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று நாடுமுழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என மத்திய அரசு கடந்த ஆண்டு ஜூன் மாதம் அறிவித்தது.

அதன்படி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடி, மக்கள்தொகை கணக்கெடுப்பு - 2027 நடத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிகள் ரூ.11,718.24 கோடியில் இரு கட்டங்களாக நடத்தப்படும் என்றும், முதற்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டு 2026 ஏப்ரலில் தொடங்கி, செப்டம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்பணியில் 30 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மத்திய அரசு உத்தரவுப்படி, தமிழகத்தில் நடைபெறும் மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் ஜூலை 17 முதல் ஜூலை 31-ம் தேதி வரை மக்கள் சுயமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்களை இணையவழியில் பதிவிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆக.1 முதல் 30-ம் தேதிக்குள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இப்பணியில் அரசு ஆசிரியர்கள், களப்பணியாளர்கள், மாவட்டம், துணை மாவட்டம் மற்றும் மாநில அளவிலான பிற மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் என சுமார் 1.20 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தங்கள் வழக்கமான பணிகளுடன் கூடுதலாக மக்கள் தொகை கணக்கெடுப்பின் களப்பணியையும் செய்வார்கள். அதற்காக அவர்களுக்கு மதிப்பூதியமும் வழங்கப்பட உள்ளது.

இந்த கணக்கெடுப்பில், வீட்டுவசதி நிலை, வசதிகள் மற்றும் சொத்துகள், வீட்டு உறுப்பினர்கள் எண்ணிக்கை, மதம், எஸ்சி மற்றும் எஸ்டி, மொழி, எழுத்தறிவு மற்றும் கல்வி, பொருளாதார செயல்பாடு, இடம்பெயர்வு உள்ளிட்ட 33 கேள்விகளுடன் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட உள்ளன.

டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக, மக்கள்தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (சிஎம்எம்எஸ்) போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

# கர்நாடகத்தில் 16 வயதுக்குட்பட்டோர் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த தடை

பெங்களூரு, மார்ச் 6: கர்நாடகத்

# பொன்னுக்கு வீங்கி பாதிப்பு: தற்காத்துக் கொள்ள அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 6:** தமிழகத்தில் பருவ கால மாற்றத்தின் காரணமாக குழந்தைகளிடையே பொன்னுக்கு வீங்கி (மம்ப்ஸ்) வைரஸ் பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதையடுத்து முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

'மம்ப்ஸ்' எனப்படும் வைரஸ் மூலம் பரவும் பொன்னுக்கு வீங்கி நோயானது காதுகள் மற்றும் தாடைக்கு இடையே உள்ள பகுதியில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது. உமிழ்நீர் சுரப்பிகளில் அத்தகைய வீக்கம் உருவாவதால் கடுமையான வலி மற்றும் காய்ச்சல் ஏற்படக்கூடும். அதனுடன் தலைவலி, பசியின்மை, கன்னங்கள் வீங்குதல், சோர்வு உள்ளிட்ட அறிகுறிகளும் காணப்படலாம்.

பொன்னுக்கு வீங்கி பாதித்தவர்களின் இருமல், தும்மல், சளி, உமிழ்நீர் திவலைகள் மூலம் பிறருக்கு அது பரவும். ஒரு வாரத்திலிருந்து 14 நாள்களுக்குள் அந்த பாதிப்பு உடலுக்குள் ஊடுருவி அறிகுறிகளை வெளிப்படுத்தும். இதற்கென தனியாக தடுப்பு மருந்துகள் தேவையில்லை என்பதால், நோய் தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்திக் கொண்டு இருந்தாலே அந்தப் பாதிப்பு சரியாகிவிடும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக பலருக்கு பொன்னுக்கு வீங்கி கண்டறியப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

ஒவ்வொரு பருவ காலங்களிலும், சில வகையான தொற்றுகள் பரவுகின்றன. அந்த வகையில், தற்போது பொன்னுக்கு வீங்கி பரவி வருகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை கடந்த ஆண்டை போலவே நிகழாண்டிலும் அந்தப் பாதிப்பு பதிவாகி வருகிறது. எனினும், அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், தொற்றுக்குள்ளான ஓரிரு வாரத்தில் தானாகவே அது சரியாகிவிடும்.

நோய் பரவாமல் தடுக்கும் வகையில் பாதிக்கப்பட்டவர், தம்மை தனிமைப்படுத்திக் கொண்டாலே போதுமானது.

தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் எம்.ஆர். எனப்படும் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி வழங்கப்படுகிறது. அதேவேளை, எம்.எம்.ஆர். எனப்படும் தட்டம்மை மம்ப்ஸ் ரூபெல்லா தடுப்பூசி செலுத்தப்படுவதில்லை. தடுப்பு மருந்துகளைக் காட்டிலும், நோய் எதிர்ப்பாற்றலே இத்தகைய பாதிப்பைச் சரி செய்துவிடும். பொதுமக்கள் பதற்றமடைய வேண்டியதில்லை என்றனர்.

---

அதுல்ய மிஸ்ரா   அபய் குமார் சிங்

**சென்னை, மார்ச் 6:** தமிழ்நாடு தகவல் ஆணையத்துக்கு இரு புதிய மாநில தகவல் ஆணையர்கள் பதவியேற்றனர். இவர்களுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (மத்திய சட்டம் 22/2005) பிரிவு 15 -இன் துணைப் பிரிவு (3) ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆளுநர் ஆர். என்.ரவி, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதுல்ய மிஸ்ரா, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோரை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநில தகவல் ஆணையர்களாக நியமித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அதுல்ய மிஸ்ரா, அபய்குமார் சிங் ஆகியோர் மாநில தகவல் ஆணையர்களாக ஆளுநர் ஆர். என். ரவி முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு தகவல் ஆணைய மாநில தலைமை தகவல் ஆணையர் ஷகீல் அக்தர், மனிதவள மேலாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலர் சி. சமயமூர்த்தி, ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆர். கிர்லோஷ் குமார், மாநில தகவல் ஆணையர்கள் பங்கேற்றனர்.

# தமிழ்நாட்டின் ஏழை எளியோரின் விடிவெள்ளியாய் திகழும் மத்திய அரசு!

தமிழ்நாட்டிலுள்ள **3.6 கோடிக்கும் அதிகமானோர்** பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் இலவச உணவு தானியங்களைப் பெற்று முழுமையான உணவுப் பாதுகாப்பை பெற்றுள்ளனர்

**1.1 கோடிக்கும் அதிகமான** குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் **41 லட்சத்திற்கும் அதிகமான** உஜ்வாலா இலவச சமையல் எரிவாயு இணைப்புகள், தமிழக பெண்களின் அன்றாட வாழ்க்கையை கண்ணியமானதாகவும், ஆரோக்கியமானதாகவும் மாற்றியுள்ளது

பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் **14 லட்சத்துக்கும் அதிகமான** வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு, ஏழை எளியோரின் சொந்தவீடு கனவு நனவாகியுள்ளது

தமிழ்நாட்டில் **1.8 கோடிக்கும் அதிகமான** ஜன் தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு அதன்மூலம் சாமானியரும் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலையால், நிதி சார்ந்த மோசடிகள் தடுக்கப்பட்டுள்ளன

தமிழ்நாட்டில் பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் **4 லட்சத்திற்கும் அதிகமான** சாலையோர வியாபாரிகளுக்கு **1,000 கோடிக்கும் அதிகமாக** கடன் வழங்கப்பட்டு, அவர்களின் சுயசார்பு மற்றும் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது

பிரதமரின் ஜீவன் ஜோதி ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் **1.2 கோடிக்கும் அதிகமான** மக்கள் பயனடைந்துள்ளனர்

பிரதமரின் சுரக்ஷா பீமா விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் **2.5 கோடிக்கும் அதிகமானோரும்,** அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் **54 லட்சத்திற்கும் அதிகமானோரும்** இணைந்து நிதிப் பாதுகாப்பை பெற்றுள்ளனர்

சௌபாக்யா திட்டத்தின் கீழ் **100%** வீடுகள் மின்மயமாக்கப்பட்டு, அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு கிடைத்துள்ளது

---



பொது அறிவு : பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களிலும் செங்காந்தள் மலர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய சிறப்புமிக்க மலர்தான் தமிழ்நாட்டின் மாநில மலராகப் போற்றப்படுகிறது. Gloriosa Superba என்ற தாவரவியல் பெயரைக் கொண்டுள்ளது.